தினத்தந்தி



தபால் தலையை பிரெஞ்சு தூதரக அதிகாரி திலிப் ஜான்வீர் காமியாமா வெளியிட முதல்–அமைச்சர் ரங்கசாமி பெற்றுக் கொண்டபோது எடுத்த படம். அருகில் ராதாகிருஷ்ணன் எம்.பி., அமைச்சர் ராஜவேலு, சென்னை நகர போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் மெர்வின் அலெக்சாண்டர் ஆகியோர் உள்ளனர்.

### பிரெஞ்சு தூதரகத்தில்

# 2 புதிய தபால்தலைகள் வெளியீடு

## ரங்கசாமி பங்கேற்பு

புதுச்சேரி, ஏப்.17–

புதுவையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தில் நடந்த 2 தபால் தலைகள் வெளியீட்டு நிகழ்ச்சியில் முதல்–அமைச்சர் ரங்கசாமி கலந்துகொண்டார்.

### தபால் தலைகள்

இந்தியாவும், பிரான்சும் வான்வெளி ஆராய்ச்சியில் 50ஆண்டுகளாக இணைந்து செயல்படுவதை நினைவு கூறும் வகையில் பிரதமர் நரேந்திரமோடி பிரான்சு சென்றிருந்தபோது இந்தியாவும், பிரான்சும் இணைந்து 2தபால் தலைகளை வெளியிட்டன.

இந்த தபால் தலைகள் வெளியீட்டு நிகழ்ச்சி புதுவையில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தில் நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் பிரெஞ்சு தூதர் திலிப் ஜான்வீர் காமியாமா வெளியிட அதை முதல்–அமைச்சர் ரங்கசாமி பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜவேலு, ராதாகிருஷ்ணன் எம்.பி., சென்னை போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் மெர்வின் அலெக்சாண்டர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

விழாவில் முதல்–அமைச்சர் ரங்கசாமி பேசும் போது கூறியதாவது:–

### பிரதமருக்கு நன்றி

இந்தியாவும், பிரான்சும் வான்வெளி ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட்டு வருகின்றன. புதுச்சேரியின் வளர்ச்சியில் பிரெஞ்சு அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது.

அதனடிப்படையில் புதுச்சேரியை ஸ்மார்ட் சிட்டியாக மாற்றுவதிலும் உதவி செய்ய உள்ளது. இதற்காக பிரெஞ்சு அரசுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்–அமைச்சர் ரங்கசாமி பேசினார்.